தேர்வுநிலை பேரூராட்சி, ஆலங்குளம்

ந.க.எண். 285/2013/அ1 நாள். 19.06.2013

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

ஆலங்குளம் தேர்வுநிலை பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்றவரால் 2013ம் வருடம் 10.07.2013 புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை அடியிற் குறிப்பிட்டுள்ள வேலையைச் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவம் 09.07.2013ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும்.

## நிபந்தனைகள்

1. ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியே குறிப்பிட்டுள்ளவாறு டேவணித் தொகையை செலுத்தி ரசீது பெற்றுக் ஷை ரசீதுகளை ஒப்பந்தப் புள்ளிகளோடு இணைத்து அனுப்ப வேண்டும்.
2. ஒப்பந்தப் புள்ளி 10.07.2013ம் தேதி மாலை 3.30 மணிக்கு ஆஜராகியிருக்கும் டெண்டர்தாரர் முன்னிலையில் திறக்கப்படும்.
3. டேவணித் தொகை செலுத்தாதவர்களுடைய ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப் புள்ளிகள் எவ்வித காரணம் காட்டாமலேயே நிராகரிக்க நிர்வாக அதிகாரி அவர்களுக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவருக்கு முழு அதிகாரம் உண்டு.
5. குறைந்த தொகைக்குரிய டெண்டர்கள் பரிசீலனையின்போது எடுத்துக் கொள்ளப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளிகளின் தேதியை மாற்றவோ, ஒத்திவைக்கவோ மறு ஒப்பந்தப்புள்ளி கேட்கவோ நிர்வாக அதிகாரி அவர்களுக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவருக்கு முழு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி அங்கீகாரத்திற்குட்பட்டது.
8. ஜாரியான ஒப்பந்தபுள்ளிதாரர் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து உடனடியாக வேலையை நல்ல முறையில் திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.
9. ஜாரியான ஒப்பந்தபுள்ளிதாரர் அப்போதைக்கப்போது நிர்வாக அதிகாரி மற்றும் பொறியாளர் அவர்களின் ஆலோசனைக்குட்பட்டு வேலையை நல்ல முறையில் திருப்திகரமாகவும் செய்து முடிக்க வேண்டியது.
10. பேரூராட்சி மன்ற பரிசீலனை முடிந்த பின் ஜாரியாகதவர்களுடைய டேவணித் தொகையை திருப்பிக் கொடுக்கப்படும்.
11. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அளவுகள் பிரகாரம் வேலைகள் செய்து முடிக்காவிட்டால் பணம் பட்டுவாடா செய்யப்படமாட்டாது.
12. ஜாரியானவர்களுடைய டேவணித் தொகையை தணிக்கை முடிந்த பின்பு தணிக்கை ஆட்சேபனையில்லையென்றால் வட்டியின்றி திருப்பிக் கொடுக்கப்படும்.
13. ஒப்பந்தப்படி வேலை செய்து முடிக்காவிட்டால் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து, மறு ஒப்பந்தப் புள்ளி கேட்டு அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் முதல் ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். பணி ஆரம்பிக்கப்படுமுன், பணி நடைபெறும்போது, பணி முடிவுற்ற போது உள்ள 3 நிலைகளில் புகைப்படம் சமர்ப்பிக்கப்படவேண்டும்
14. சிமெண்ட் அலுவலகத்தில் வழங்காத நிலையில் ஒப்பந்தக்காரர் தனது சொந்த பொறுப்பில் வாங்கி வேலைகளை முடிக்க வேண்டும். மதிப்பீட்டு வித்தியாசம் ஈடு செய்யப்படும்.

15. இந்த ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள வேலைக்குரிய உடன்படிக்கை எழுதி முடித்ததும் வேலையை துவங்கி வேலை உத்தரவில் கண்டுள்ள கால வரம்பிற்குள் வேலைகள் முடிக்கப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் வேலையை செய்து முடிக்காவிடில் வேலை மதிப்புத் தொகையில் ரூ.100/–க்கு பைசா 0.50க்கு மேற்படாமல் பேரூராட்சி செயல் அலுவலர் ஒப்பந்தக்காரர் மீது அபராதம் விதிக்கலாம். அவ்வாறு விதிக்கப்படும் அபராதத் தொகை சம்பந்தப்பட்ட வேலை பட்டியலிலோ அல்லது வேறு எந்த வேலைக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்கப்படும் பட்டியலிலோ அல்லது அவருக்கு சேர வேண்டியதாக உள்ள இதர தொகையிலிருந்தோ பிடித்தம் செய்யப்படும். மேலும் ஒப்பந்தக் கால வரம்பிற்குள் வேலையை செய்து முடிக்காத காரணத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு பேரூராட்சி ஒப்பந்தக்காரர் மீது தாவா செய்யலாம். அபராதம் விதிக்கப்பட்ட பின்னரும் வேலை விரைவாகவும் தரமானதாகவும் செய்யப்படவில்லையென செயல் அலுவலர் கருதினால் ஒப்பந்த டேவணி பறிமுதல் செய்து பேரூராட்சி நிதிக்கு ஈடு செய்யப்படும். மேலும் வேறு ஒப்பந்தக்காரர் பொறுப்பில் மீதியுள்ள வேலையை இதர மூலப் பொருட்களை கொண்டு செய்த முடிக்க உத்தரவிட செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்கள் அனைத்தும் ஒப்பந்தக்காரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **https://tntenders.gov.in** and **http://townpanchayat.tn.gov.in/tender** என்ற இணையதளத்தில் 21/06/2013ம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

17. இதர விபரங்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## பொதுநிதி திட்டம் 13 – 14

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.) (இலட்சத்தில்) | டெண்டர் டெபாசிட் (ரூ,) | ஒப்பந்தப்புள்ளி படிவ கிரையத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | 7வது வார்டு கெங்கை மைதானம் பகுதியில் 30000லி கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து அதற்கு தண்ணீர் தொட்டியான்குளம் அருகில் உள்ள கிணற்றினை ஆழப்படுத்தி தண்ணீரினை பம்பிங் செய்து பைப்லைன் அமைத்தல் பணி | 20.00 | 20000 | 6240 |

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி,
ஆலங்குளம்

பெறுநர்
அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்
ஆலங்குளம் பேரூராட்சி

நகல் :-

1. திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர் அவர்கள், திருநெல்வேலி.
3. உதவிப் பொறியாளர் அவர்கள், சிவகிரி பேரூராட்சி (பொறுப்பு ஆலங்குளம்) தகவலுக்கு
4. நிர்வாக அதிகாரி பேரூராட்சி அலுவலகம், சுரண்டை, கீழப்பாவூர், இலஞ்சி, ஆய்குடி
5. தலைவர், ஆலங்குளம் பேரூராட்சி மன்றம்
6. அலவலக விளம்பர பலகைக்கு